**12.09.2025**

**STC.567/2022**

**PW-1, பிரித்விராஜ்**

**( எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விவசாயம் செய்து வருகிறேன். கோழிபண்ணை வைத்திருக்கிறேன். பால்மாடு வைத்து தொழில் செய்து வருகிறேன். எதிரியின் கணவர் எனக்கு எப்படி பழக்கம் என்றால் கட்சி ரீதியாகவும் உறவுமுறையில் பங்காளி என்பதால் எனக்கு நன்கு பழக்கம். எதிரியின் கணவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். எனக்கும் இந்த எதிரிக்கும் வழக்கு காசோலை தொகை தவிர வேறு கொடுக்கல் வாங்கல் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் என்றைக்கு எதிரி என்னிடம் வந்து பணம் கேட்டார் என்று வழக்கறிஞர் அறிவிப்பிலோ நான் தாக்கல் செய்துள்ள முறையீட்டியிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னிடம் எதிரி ஒரு மாதமாக அக்டோபர் மாதத்தில் இருந்து பணம் கேட்டார். அந்த தேதி என்னால் சொல்ல முடியாது. அக்டோபர் மாதம் பணம் கேட்டார் என்ற விபரத்தை எனது புகாரிலோ நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை. நான் அக்டோபர் மாதம் என்பது 2021 ம் வருடம் ஆகும். நான் நெல் விற்று வைத்திருந்த பணம் 2 மாடுகள் விற்று வைத்திருந்த பணம் மற்றும் என் மகளிடம் சிறிது பணம் வாங்கி எதிரிக்கு பணம் கொடுத்தேன். இந்த விஷயத்தை தான் நான் புகாரிலும் நிரூபண வாக்குமூலத்திலும் வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லியுள்ளேன். நான் எனது புகாரிலோ அறிவிப்பிலோ நிரூபண வாக்குமூலத்திலோ எந்த தேதி என்று குறிப்பிட்டு காசோலை வழங்கப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேனா என்றால் 25.11.2021ம் தேதியிட்டு தான் காசோலை என்னிடம் கொடுத்தார். இந்த விபரத்தை நான் எனது வழக்கில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். நான் சொல்லி தான் அவருக்கு தெரியும். 25.11.2021 ம் தேதியிட்டு எதிரி எவ்வித காசோலையும் எனக்கு வழங்கவில்லை என்றால் சரியல்ல. நான் தொகை கொடுத்த தேதியும் காசோலை வழங்கிய தேதியும் காசோலை தேதியும் ஒன்று தான்

என்றால் சரிதான். எதிரியின் ATM card, வங்கியின் கணக்கு புத்தகம், மற்றும் காசோலை எண்.253771 முதல் 253780 வரையுள்ள காசோலைகளும் தவறிவிட்டதாக 04.12.2018 அன்று அறந்தாங்கியில் உள்ள ஆக்ஸிஸ் வங்கியில் எதிரி மனு செய்து அது எங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த காசோலைகள் அனைத்தும் பணபரிவர்த்தனைகள் நிறுத்திவைக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எதிரி அந்த நேரத்தில் அறந்தாங்கியில் இருந்து திருமங்கலத்திற்கு வந்து சென்று கொண்டிருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த நேரத்தில் குடும்ப செலவிற்காக காசோலையில் கையெழுத்து செய்து தேதி குறிப்பிடாமல் இருந்த காசோலையை எதிரியின் கணவரோடு இருந்த மனவருத்தத்தின் காரணமாக தாக்கல் செய்துள்ள காசோலையை 2018ம் வருடமே எடுத்துச் சென்று 2021ம் வருடம் தங்களிடம் கடன் வாங்கியது போல் காண்பித்து சட்டபூர்வமாக பெறாத கடனுக்காக எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எதிரி என்னிடம் எவ்வித கடனும் பெறவில்லை என்றாலும் எந்த விதமான காசோலையும் எனக்கு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.